முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 23.06.2025

O.S. 168/2021

வா.சா. 2 -

பெயர்: வெள்ளையாதுரை

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் நெய்வேலி பால் சொசைடியில் வேலை பார்த்தேன். நான் 2010 ல் விருப்ப ஓய்வு பெற்றேன். எனக்கு வெட்டு நோயால் பாதிக்கப்பட்டுள்ளேன். தற்போது வரை நான் அதற்கு மருந்து எடுத்து வருகிறேன். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி யார் என எனக்கு தெரியாது. எனது மனைவியின் ஊர் முகிலன்குடியிருப்பு என்றால் சரியல்ல, இலந்தையடி விளை ஆகும். நான் வசித்து வரும் வீட்டின் கதவு எண் E1-147 என்றால் சரிதான். அந்த முகவரிக்கு எனக்கு ரேசன் கார்டு உள்ளதா என்றால், இல்லை. எனது வீட்டின் அருகே யோவான் பட்டரை என்ற சன்னல் சட்டத்தில் துளையிட்டு கொடுக்கும் வேலை செய்து வருகிறார் என்றால் இல்லை. வாதிக்கோ வாதியின் கணவருக்கோ பிரதிவாதியின் சொத்தின் அருகே சொத்து யில்லை என்றால் சரிதான். இலந்தையடிலிருந்து கோட்டையடிக்கு 4 கி.மீ தூரம் இருக்கும் என்றால் அதை விட கூடுதலாக இருக்கும். வழக்கு சொத்தின் புதிய பழைய சர்வே எண்கள் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சொத்துகளை சுற்றியுள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. ஜேகப் எட்வின் ஆசாரி வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். 1999 ம் வருடம் PMRY 17771 -A5-1999 ன் மூலம் லோன் பெற்று தென் தாமரைக்குளம் IOB வங்கியில் லோன் பெற்று ஒரு குடிசை தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது. 1989 ல் நெய்வேலியில் நான் வேலை பார்த்து கொண்டிருந்தேன். 1989 ல் சொர்ணபாய் மரியம்மாள் என்ற நபரிடம் இருந்து வாதியின் கணவர் மரியமாளுக்கு உரிமைப்பட்ட 23 1/2 ல் 11.3/4 சென்டை தெற்கு பக்கம் கிரயம்

வாங்கினார் என்றால் தெரியாது. மேற்படி விபரங்களை தெரிந்து கொண்டே பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி இடத்தில் எனது அண்ணன் எவ்வித அரசாங்க அனுமதி யில்லாமல் சட்ட விரோதமாக வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். எனது அண்ணன் plan approval வாங்கவில்லை. எனது அண்ணன் வீட்டில் தினமும் இரவு படுத்து தூங்குவேன் என்றால் சரிதான். வாதியின் வீடும் 1ம் பிரதிவாதியின் வீடும் அடுத்தடுத்த ஒட்டியிருக்கும் வீடு இல்லை என்றாலும் கார் நிறுத்த இடம் உள்ளது என்றால் சரியல்ல. கால்வாய் தான் உள்ளது. உண்மையில் இரண்டு வீட்டுக்கும் இடையே 11 ½ காலியிடம் உள்ளது என்றால் அந்த இடம் எனது அண்ணன் வாங்கிய இடம் ஆகும். 1ம் பிரதிவாதி செய்யும் குடிசை தொழில் இடமானது நான்கு புரமும் செங்கல் சுவர் கட்டப்பட்டு கூரை அமைக்கப்பட்ட கட்டிடம் என்றால் சரிதான். வீடே கட்டிவிட்டார் அந்த இடத்தில். அந்த இடத்தில் முதலில் கூரை வேய்ந்து பின்பு கட்டிடம் கட்டிவிட்டார். எனது அண்ணன் 1ம் பிரதிவாதியின் தொழிலுக்கு தடையில்லை என்று சான்று வாங்கினார் என்றால் சரிதான். உண்மையில் 1ம் பிரதிவாதி மர அறுவை மில் வைக்கவில்லை என்றாலும் 1 மர அறுவை மில் வைப்பதற்கு குறைந்தது 30KW மின்இணைப்பு வேண்டும் என்றாலும் 1ம் பிரதிவாதியிடம் அந்த அளவுக்கு மின் இணைப்பு எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மின் இணைப்பு பற்றி தெரியாது. 1ம் பிரதிவாதி ஏற்கனவே அறுக்கப்பட்டு அளவு செய்யப்பட்ட மரச் சட்டங்களை பொழி போடுவதும், துளையிடுவதற்கு ஏற்ற சிறிய அளவிலான plainner என்றால் தெரியாது. நான் இன்று எனது அண்ணியின் கைத்துணையுடம் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ( ஆனால் அவர் ஒரு பெண் துணையுடன் நீதிமன்றத்திற்கு வந்தார். ). நான் எனது அண்ணன் வீட்டிற்கு வருவதுயில்லை என்றாலும் அங்கு சத்தம் எதுவும் கேட்காது என்றாலும், 1ம் பிரதிவாதி செய்யும் குடிசை தொழிலினால் எந்த விதமான சுகாதார கேடு மற்றும் மாசுகளும்

ஏற்படவில்லை என்றாலும் நான் எனது அண்ணனுக்காக பொய்சாட்சியம் அ ளிக்கிறேன் எனறாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. எனது அண்ணனின் உடன் பிறந்த சகோதரர்கன் எனது அண்ணனின் வீட்டிற்கு அருகாமையில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தால் உண்மை தெரிந்து விடும் என்பதற்காக இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினர் அனைவரும் 1ம் பிரதிவாதியின் குடும்பம் வழக்கு சொத்திற்கு அருகில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

2 ம் 3 ம் பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.